தினமணி

**துவரை சாகுபடிக்கு மானியம்**

First Published : 05 Aug 2010 12:00:00 AM IST

பண்ருட்டி, ஆக. 4: பண்ருட்டி வட்டாரத்தில் துவரை சாகுபடியை ஊக்கப்படுத்த ஒரு ஹெக்டேர் துவரை சாகுபடிக்கு ரூ.5 ஆயிரம் மானியம் அளிக்கப்படுகிறது என வேளாண்மை உதவி இயக்குநர் பி.ஹரிதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு: தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தில் துவரை உற்பத்தியை அதிகப்படுத்த, ஒரு ஹெக்டேர் சாகுபடி செய்ய தேவையான விதை, விதை நேர்த்தி மருந்து, நுண்ணுயிரி பொட்டலம், நுண்ணுரம், ரசாயன உரங்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள் யாவும் மானிய விலையில் வழங்கப்பட உள்ளன.

சாலையோரங்களில் வடிகால் வசதியுள்ள இறுமண்பாடான நிலம் கொண்ட விவசாயிகள் உடன் வேளாண்மைத் துறை அதிகாரிகளை தொடர்பு கொண்டு பயனடையலாம்.

**மானிய விலையில் நெல் விதை**

First Published : 05 Aug 2010 12:00:00 AM IST



கடலூர், ஆக. 4:  கடலூர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டத்தில் மானிய விலையில் விதைநெல் வழங்கப்படும் என்று வேளாண் இணை இயக்குநர் ச.இளங்கோவன் அறிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: 2010-11-ம் ஆண்டுக்கு விவசாயிகளுக்குச் சான்று பெற்ற விதைநெல், கிலோவுக்கு ரூ.5 மானியம் வழங்கப்படும். 10 ஹெக்டேரில் செம்மை நெல் சாகுபடியைக் குழுக்களாகச் செய்யும் விவசாயிகளுக்கு ரூ.30 ஆயிரம் மானியம் வழங்கப்படும்.

நெல்லில் ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ள, உழவர் வயல்வெளிப் பயிற்சிப் பள்ளிகள் நடத்தி ஒரு உழவருக்கு மானியம் ரூ.17 ஆயிரம் வழங்கப்படும். 30 விவசாயிகளுக்கு வயல்வெளிகளில் பூச்சிநோய் கண்காணிப்பு முறைகள் மேற்கொள்ளவும், பூச்சி மற்றும் நோய்த்

தன்மை அறிந்து இயற்கை எதிரிகளை வயல்வெளிகளில் அழிக்காமல் பயிர் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும் வகுப்புகள் நடத்தப்படுகிறது.
இத்திட்டத்தின் மூலம் சிக்கனமான செம்மைநெல் சாகுபடி முறைகளை விவசாயிகள் கையாண்டு, அதிக மகசூல் பெறுவதே நோக்கம் ஆகும்.
விவசாயிகள் அருகில் உள்ள வேளாண் அலுவலர்களை அணுகி அரசு வழங்கும் மானியங்களையும் பயிற்சிகளையும் பெற்றுப் பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்றும் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

**மஞ்சளில் அதிக மகசூல்: சாதனை பெண் விவசாயி**

First Published : 05 Aug 2010 12:00:00 AM IST



விவசாயி கோகிலா பயிரிட்ட மஞ்சள் பயிர்.

விழுப்புரம், ஆக. 4: விழுப்புரம் மாவட்டத்தில் சொட்டு நீர்ப் பாசனத் திட்டத்தின் மூலம் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் மஞ்சள் சாகுபடி செய்து நிகர லாபமாக ரூ.11.80 லட்சம் ஈட்டியுள்ளார் பெண் விவசாயி கோகிலா.
தியாகதுருகம் ஒன்றியம், ஓகையூர் கிராமத்தைச் சேர்ந்தவர் கோகிலா. தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் சொட்டு நீர்ப் பாசனத் திட்டத்தின்கீழ் மஞ்சள் கிழங்கு பயிரிட்டார். 2009 ஜூன் மாதம் முதல் வாரத்தில் 2 ஏக்கர் பரப்பளவில் உரிய இடைவெளியில் நடவு செய்து, அடியுரமாக தொழு உரம் 5,500 கிலோ, விரிடி 10 கிலோ, சூடோமோனஸ் 10 கிலோ இட்டு நடவு செய்துள்ளார்.
மேலும் தோட்டக்கலைத் துறை வழங்கிய சொட்டுநீர் பாசனக்கருவி அமைத்து நீர்வழி உரமளிக்கும் டாங்க் மூலம் வாரத்துக்கு இருமுறை நீரில் கரையும் உரத்தை இட்டு, 4 மூட்டை (100 கி) சல்பேட்டா, 2 மூட்டை (50 கி) பொட்டாஷ் ஆகியவை மேலுரமாக போட்டுள்ளார். மேலும் சூடோமோனஸ் 1 லிட்டர் மற்றும் விரிடி 1 லிட்டர் திரவங்களை உரடாங்க் மூலம் அளித்துள்ளார்.
இதுகுறித்து கோகிலா கூறியது: உர நிர்வாகம், பயிர் பாதுகாப்பு முறைகள் உள்பட அனைத்து தொழில்நுட்பங்களையும் தோட்டக்கலை உதவி இயக்குநரின் நேரடி வயல் ஆய்வின் மூலம்

பெற்று சீரான நடவடிக்கை மேற்கொண்டேன். எனது மஞ்சள் பயிர் 2010 மார்ச் இறுதி வாரத்தில் அறுவடைக்கு வந்தது.அறுவடையின் போது எனக்கு விரல் மஞ்சள் 2 ஏக்கருக்கு 26 ஆயிரம் கிலோ மற்றும் உருளை மஞ்சள் 4 ஆயிரம் கிடைத்தது. விரல் மஞ்சளை ஒரு கிலோ ரூ.40 வீதமும், உருளை மஞ்சளை ஒரு கிலோ ரூ.60 வீதமும் விற்பனை செய்தேன். மொத்த வருமானமாக ரூ.12.80 லட்சம் கிடைத்தது. இதற்காக நான் ரூ.1 லட்சம் செலவு செய்தேன். இதில் என்னுடைய சாகுபடி செலவு போக நிகர வருமானமாக ரூ.11.80 லட்சம் பெற்றுள்ளேன் என்றார்.

இது குறித்து தியாகதுருகம், தோட்டக்கலை உதவி இயக்குநர் டேவிட் பியூலா ராஜா கூறியது: எங்களது அனைத்து தொழில்நுட்பங்களையும் முறையாக பயன்படுத்தியதால் தான் யாரும் எதிர்பாராத அளவுக்கு கோகிலா, 2 ஏக்கரில் மஞ்சள் பயிரிட்டு ஏறத்தாழ ரூ.12 லட்சம் லாபம் பெற்றுள்ளார் என்றார்.

**உரம் தயாரிப்பு செயல் விளக்கம்**

First Published : 04 Aug 2010 12:39:42 PM IST

திருவெறும்பூர்,ஆக. 3: திருச்சி மாவட்டம், அரியமங்கலத்தில் உள்ள திருவெறும்பூர் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தின் சார்பில் தென்னை நார் கழிவுகளிலிருந்து உரம் தயாரிப்பது குறித்த செயல் விளக்கம் திங்கள்கிழமை நடைபெற்றது.

அரியமங்கலத்தைச் சேர்ந்த சீனிவாசனின் வயலில் செயல் விளக்கம் செய்து காட்டப்பட்டது. திருவெறும்பூர் வட்டார வேளாண்மை வரிவாக்க மைய உதவி இயக்குநர் இரா.ரவி தலைமை வகித்தார். வேளாண்மை அலுவலர் உஷாராணி செயல் விளக்கம் செய்து காட்டினார். இதற்கான ஏற்பாடுகளை அலுவலர்கள் ஜனர்த்தனம், அமல்ராஜ், திருகுமரன், சரவணன், இசபெல்லா, ஹேமா உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

**50% மானிய விலையில் நுண்ணூட்ட சத்து**

First Published : 04 Aug 2010 01:30:25 PM IST

கிருஷ்ணகிரி, ஆக. 3: நெற் பயிரில் கூடுதல் வருவாய் ஈட்ட ஜிங்க்சர்பேட் நுண்ணூட்ட சத்து அளிக்கலாம். இது 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகிறது என வேளாண்மை இணை இயக்குநர் கா.ராஜன் கூறினார்.

இதுகுறித்து செவ்வாய்க்கிழமை அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நெல் நாற்று விட்டு நடவுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தத் தருணத்தில் நெற் பயிருக்கு ஜிங்க்சல்பேட் இடுவதால் பயிர் விரைவாக பச்சை கட்டும். விவசாயிகளுக்கு கூடுதல் வருவாயும் கிடைக்கும்.

ஜிங்க்சல்பேட் நுண்ணுரம் நெற் பயிருக்கு இடவேண்டியது முக்கியமான தொழில்நுட்பமாகும். இது தழை, மணி, சாம்பல் சத்துகளை பயிர் எடுத்துக் கொள்ள தேவையான ஒரு கிரியோ ஊக்கியாகும்.

ஜிங்க்சத்து பயிருக்கு எதிர்ப்பு சக்தியை அளிக்கிறது. கந்தக சத்து பயிரின் வேர் வளர்ச்சிக்கும், தானிய உற்பத்திக்கும் உதவுகிறது. ஜிங்க்சல்பேட்டானது களர் மற்றும் உவர் நிலங்களுக்கு கண்டிப்பாக பயன்படுத்த வேண்டும்.

ஜிங்கசல்பேட் சத்து குறைவால் பயிர் வளர்ச்சி குன்றும். தூர் கட்டுதல் குறைந்து விடும். முதலில் இளம்தளிர்கள் மஞ்சள் நிறமாகவும், பின்னர் இலைகளும் மஞ்சள் நிறமாக காணப்படும். இலையின் அடிபாகத்தில் நடுநரம்பின் இருபுறமும் பட்டையான மஞ்சள் நிறக்கோடுகள் தோன்றும். நெற்மணி பிடித்தல் காலதாமதமாகும்.

நெல் நடவு செய்ய உள்ள வயலுக்கு அடியுரமாக ஏக்கருக்கு 10 கிலோ ஜிங்க்சல்பேட்டை 20 கிலோ மணலுடன் கலந்து நடுவதற்கு முன் சீராக இட வேண்டும். களர் நிலமாக இருந்தால் ஏக்கருக்கு 16 கிலோ ஜிங்க்சல்பேட்டை 20 கிலோ மணலுடன் கலந்து இட வேண்டும். நடவு செய்த 1 வாரத்துக்குள்ளும் இடலாம்.

அனைத்து பிரதான மற்றும் துணை வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் ஜிங்க்சல்பேட் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. 50 சதவீத மானியத்துடன் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்று அவர் கூறியுள்ளார்.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைகிறது**

First Published : 04 Aug 2010 11:00:26 AM IST

மேட்டூர், ஆக 3: மேட்டூர் அணைக்கு நீர் வரத்து படிப்படியாக குறைந்து வருகிறது.

கடந்த வாரத்தில் கர்நாடக மாநிலத்தில் பருவ மழை காரணமாக காவிரியில் நீர் வரத்து அதிகரிக்கத் தொடங்கியது. இதனால் கர்நாடகத்தில் உள்ள கபினி மற்றும் கிருஷ்ணராஜசாகர் அணைகளுக்கு நீர்வரத்து கணிசமாக அதிகரித்தது.

நீர் வரத்து காரணமாக அந்த அணைகளிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால் மேட்டூர் அணைக்கு அதிகபட்சம் விநாடிக்கு 25 ஆயிரம் கன அடி வரை தண்ணீர் வந்து கொண்டிருந்தது. தற்போது பருவமழை குறைந்ததன் காரணமாக கிருஷ்ணராஜசாகர் அணைக்கு விநாடிக்கு 14,127 கன அடி வீதமும், கபினி அணைக்கு விநாடிக்கு 8,548 கனஅடி வீதமும் தண்ணீர் மட்டுமே வந்து கொண்டிருக்கிறது. அங்கிருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவு விநாடிக்கு 7,732 கன அடியாக குறைக்கப்பட்டுள்ளது. இதனால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு படிப்படியாக குறையத் தொடங்கி உள்ளது. ÷செவ்வாய்கிழமை மாலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 84.85 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 16,762 கன அடியாக குறைந்தது. (செவ்வாய்கிழமை காலை

அணைக்கு விநாடிக்கு 20,196 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது) பாசனத்திற்கு விநாடிக்கு 4,004 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டிருந்தது. நீர் இருப்பு 46.96 டி.எம்.சியாக இருந்தது.

**அதிக விலைக்கு உரம் விற்பதை தவிர்க்க கண்காணிப்பு குழு: ஆட்சியர்**

First Published : 05 Aug 2010 08:22:27 AM IST

திருவள்ளூர், ஆக. 4: திருவள்ளூர் மாவட்டத்தில் உரம் அதிக விலையில் விற்கப்படுவதைத் தடுக்க கண்காணிப்பு குழு அமைக்கப்படும் என, அண்மையில் நடைபெற்ற விவசாயிகள் குறைத் தீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் தெரிவித்தார்.

÷இக் கூட்டத்தில் விவசாயிகள், மழை நேரத்தில் நீரை சேமிக்க ஏரிகளை தூர்வார வேண்டும், ஆக்கிரமிப்பில் உள்ள நீர்வரத்து கால்வாய்களை மீட்க வேண்டும். கணினி மூலம் பட்டா வழங்க வேண்டும்.

÷சீசன் நேரத்தில் உர விற்பனையாளர்கள் கூடுதல் விலைக்கு உரங்களை விற்பனை செய்கின்றனர்.

அதை தடுக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை மாவட்ட ஆட்சியரிடம் முன் வைத்தனர்.

÷இதைத் தொடர்ந்து, அனைத்து கோரிக்கைகளையும் விரைவாக ஆய்வு செய்து பிரச்னைகளை தீர்க்க வேண்டும் என சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு ஆட்சியர் உத்தரவிட்டார்.

÷மேலும் அதிக விலைக்கு உரங்கள் விற்கப்படுவதை தடுக்கும் வகையில் மாவட்டம் முழுவதும் கண்காணிப்புக் குழு அமைத்து அதன் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.

÷மாவட்ட வருவாய் அலுவலர் எஸ்.சோமசுந்தரம், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) ராஜகோபால், வேளாண்மை இணை இயக்குநர் சீனிவாசலு மற்றும் விவசாயம் சார்ந்த அனைத்துத் துறை அலுவலர்களும் பங்கேற்றனர்.

தினமலர்

**விவசாய பொருட்காட்சி முகாமில் மண் மற்றும் நீர் மாதிரி பரிசோதனை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 05,2010,01:57 IST

விழுப்புரம்:விழுப்புரத்தில் நடைபெற உள்ள விவ சாய பொருட்காட்சியில் மண் மற்றும் நீர் பரிசோதனை செய்யப்படுகிறது.கோலியனூர் வேளாண்மை உதவி இயக்குனர் இளவரசன்

வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:மாவட்ட அளவிலான விவசாய பொருட் காட்சி வரும் 6,7,8,9 ஆகிய தேதிகளில் விழுப்புரம் வி.வி.ஏ., திருமண மண்டபத்தில் நடக்கிறது. சென்னை டிரேடு ஈவன்ட் நிறுவனத்தால் நடத்தப்படும் இக்கண்காட்சியை கலெக்டர் பழனிசாமி துவக்கி வைக்கிறார். இதில் வேளாண் துறை உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் பங்கேற்கின்றன. இம்முகாமில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் நான்கு நாட் களும் மண் ஆய்வு மற் றும் நீர் மாதிரி ஆய்வு முகாம் நடத்தப்படுகிறது. எனவே விவசாய கண்காட்சிக்கு வரும் விவசாயிகள் தங்கள் வயல்களில் 6 இடங் களில் வி. வடிவில் பள்ளம் எடுத்து அதிலிருந்து அரை கிலோ அளவு மண், பாலிதீன் பைகளில் எடுத்து வர வேண் டும். மண் மாதிரிக்கு 5 ரூபாயும், நீர் மாதிரிக்கு 10 ரூபாயும் கட்டணமாக வசூலிக்கப்படும்.விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள், மகளிர் சுய உதவிக்குழுக்கள், ஆண்கள் சுய உதவிக் குழுக்கள், உழவர் மன்றங்களை சேர்ந்தவர்கள் மண் மற்றும் நீர் மாதிரி சோதனைகள் செய்து பயன் பெறலாம்.

### பருவமழை தாமதத்தால் பரிதவிக்கும் விவசாயிகள்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 05,2010,02:21 IST

சிறுபாக்கம்:சிறுபாக்கம், வேப்பூர் மானாவாரி விவசாயிகள் நிலத்தினை உழுது, பருவமழையை எதிர்பார்த்து காத்துள்ளனர்.சிறுபாக்கம் மற்றும் வேப்பூர் பகுதிகளைச் சுற் றியுள்ள கழுதூர், அரியநாச்சி, சேப்பாக்கம், பெரியநெசலூர், மங்களூர், மலையனூர், அரசங்குடி, ஒரங்கூர் உள்ளிட்ட சுமார் 100 கிராமங்களைச் சேர்ந்த மானாவாரி விவசாயிகள் தொடக்க காலத்தில் ஆடிப்பட்டத்திற்கு ஏற்றவாறு, தங்களின் மானாவாரி நிலங்களில் வரகு, சோளம், மணிலா பயிர் கள் விளைவித்து வந்தனர்.கடந்த சில ஆண்டுகளாகவே பருவநிலை மாற்றத்தால் காலம் தவறிய மழை, கடுமையான வெயில் ஆகியவற்றால் பயிர்களை மாற்றி, பருத்தி, மக்காச்சோளம் பயிர்களை விளைவித்து வருகின்றனர். "ஆடிப்பட்டம் தேடி விதை' என்ற பழமொழிக்கேற்ப முன்னதாக பயிரிட்ட நிலத்திலுள்ள கழிவுகள், களைகளை அகற்றி 4 முறை டிராக்டர் கொண்டு உழவு செய்து நிலத்தினை தயார் செய்தனர்.ஆனால் இந்த ஆண் டும் பருவமழை பெய்யாமல் கடந்த ஒரு மாதங் களாக காலம் தாழ்த்தி வருவதால் மானாவாரி விவசாயிகள் பரிதவிப்புடன் பருவமழையை எதிர்பார்த்து காத்துள் ளனர்.

### விவசாயிக்கு 1 லி., பஞ்சகவ்யா இலவசமாக வழங்க ஏற்பாடு

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 05,2010,03:24 IST

திருத்துறைப்பூண்டி: "விதை நேர்த்தி செய்ய விரும்பும் விவசாயிகளுக்கு ஒரு லிட்டர் பஞ்சகவ்யா இலவசமாக வழங்கப்படும்' என ஆதிரெங்கம் கிரியேட் இயற்கை விவசாய பண்ணை பயிற்சி இயக்குனர் ஜெயராமன் தெரிவித்தார். அவர் வெளியிட்ட அறிக்கை: ஏக்கருக்கு தேவையான

விதை நெல்லை தெளிப்புக்கு முன் நூறு லிட்டர் தண்ணீரில் 300 மில்லி பஞ்சகவ்யாவை கலந்து விதை நெல்லை சாக்குடன் போட்டு 12 மணி நேரம் ஊரவைக்க வேண்டும். பின் விதை நெல்லை எடுத்து சாக்குப்போட்டு மூடி வைத்து 12 மணி நேரத்துக்குப்பின் 15 லிட்டர் தண்ணீர் 50 மில்லி பஞ்சகாவ்யவை ஊற்றி, கலக்கி விதை நெல் மூடை முழுவதும் ஊற்றி சாக்கு போட்டு இருக்கமாக மூடிவைக்க வேண்டும். பத்து மணி நேரத்துக்குப்பின் விதையை பார்த்தால் அனைத்து விதைகளும் பூண்டு முளைத்து வெள்ளி கம்பி போல் இருக்கும். அதன் பின் விதையை தெளித்து விடவேண்டும். செம்மை நெல் சாகுபடியில் குறுகிய கால பயிராக இருந்தால் பத்து நாட்களிலும், மத்திய கால பயிராக இருந்தால் 14 நாட்களிலும், நீண்ட கால பயிராக இருந்தால் 16 நாட்களிலும் நடவு செய்ய வேண்டும். சாகுபடியில் முதல் நிலை விதை நேர்த்தி மிகமுக்கியம். விதை நேர்த்தி செய்வதன் மூலம் பழுது இல்லாமல் விதை முளைக்கும். நோய் தாக்குதலை விதையிலேயே தடுக்க முடியும். பயிர் செழிப்பாக வளர ஊட்டச்சத்தாகும். எதிர் விளைவுகளை ஏற்படுத்தும் பூஞ்சானை இயற்கை விவசாய முறையில் எளிமையாக செய்வதுதான் பஞ்கவ்யா நேர்த்தி. இதற்காக விவசாயிகளுக்கு ஒரு லிட்டர் இலவசமாக பஞ்கவ்யா வழங்கப்பட உள்ளது. விவசாயிகள் தங்கள் சாகுபடி விவரத்தை தெரிவித்து பஞ்சகவ்யாவை பெற 9443320954 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு கிரியேட் ஜெயராமனிடம் பதிவு செய்து இலவச பஞ்சகவ்யா பெற்று கொள்ளலாம்.

**தே.எண்ணெய் மார்க்கெட் சூடுதேங்காய் பருப்பு விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 05,2010,04:19 IST

கோபிட்டிபாளையம்: தேங்காய் எண்ணெய் மார்க்கெட் விலை ஏறுமுகம் காரணமாக தேங்காய் பருப்புக்கு கூடுதல் விலை கிடைக்கிறது.கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வாரந்தோறும் தேங்காய் பருப்பு ஏலம் நடந்து வருகிறது. எண்ணெய் மார்க்கெட்டில் ஸ்திரமற்ற நிலை இருந்ததால், ஜூன் மாதம் வரை தேங்காய் பருப்புக்கு குறைந்த விலையே கிடைத்தது.தற்போது தேவை அதிகரித்துள்ளதால், விலையும் அதிகரித்துள்ளது. மூலப்பொருளான தேங்காய் பருப்பை கொள்முதல் செய்வதில் ஆலை அதிபர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். கடந்த வாரம் கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு 505 மூட்டைகள் ஏலத்துக்கு வந்தன. நடப்பு வாரம் 540 மூட்டைகள் வந்தது. அதிகபட்சமாக ஒரு கிலோ தேங்காய் பருப்பு 38.57 ரூபாய், குறைந்தபட்சமாக 36.11 ரூபாய், சராசரியாக 37.47 ரூபாய்க்கு விற்றது. கடந்த வாரத்தை விட தேங்காய் பருப்பு கிலோவுக்கு 21 பைசா விலை அதிகரித்திருந்தது. 10 லட்சம் ரூபாய் மதிப்பில் தேங்காய் பருப்பு வர்த்தகம் நடந்தது.தேங்காய் எண்ணெய்க்கு கூடுதல் தேவை மற்றும் விலை உயர்வால் வரும் வாரங்களில் தேங்காய் பருப்புக்கு 40 ரூபாய் வரை விலை கிடைக்கும் என, வியாபாரிகள் தெரிவித்தனர்.

**மஞ்சள் மார்க்கெட்டில் ஒரே சீரான விலைவீடுகளில் இருப்புவைக்கும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 05,2010,04:14 IST

ஈரோடு: ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில் சென்ற சில வாரங்களாக ஒரே சீரான விலை விற்கப்படுவதால் விவசாயிகள் மஞ்சள் மூட்டைகள் வீடுகளில் இருப்பு வைக்க துவங்கியுள்ளனர்.ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில் மறைமுக டெண்டர் மூலம் ஏலம் விடப்படுகிறது. வடமாநிலத்தவர்கள் பலர், "ஆன் லைன் 'மூலம் மஞ்சள் விலை நிர்ணயிக்கின்றனர். ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில் 30 ஆண்டுகளில் எப்போதும் இல்லாத அளவுக்கு நடப்பாண்டு மஞ்சள் விலை உயர்ந்து சாதனை படைத்தது.நடப்பாண்டு துவக்கத்தில் இருந்தே மஞ்சளுக்கு நல்ல விலை கிடைக்கிறது. தற்போதைய நிலவரப்படி விரலி ஒரு குவிண்டால் 15 ஆயிரத்து 170, கிழங்கு மஞ்சள் 14 ஆயிரத்து 900 வரை விற்பனையாகிறது. சில வாரங்களாக மூட்டைக்கு 200 ரூபாய் முதல் 300 ரூபாய் வரை அதிகரிப்பதும், மீண்டும் விலை குறைவதுமாக உள்ளது.மஞ்சள் விலை ஏற்றத்தாழ்வு இல்லாமல் இருப்பதால், விவசாயிகள் பலர் தங்கள் வீடுகளில் மஞ்சள் மூட்டைகளை இருப்பு வைக்க துவங்கியுள்ளனர். மஞ்சள் விலை மேலும் அதிகரிக்கும் நேரத்தில் விற்பனைக்கு கொண்டு வரலாம் என, முடிவு செய்துள்ளனர்.விவசாயிகள் கூறியதாவது:ஒரு ஏக்கர் மஞ்சள் சாகுபடிக்கு ஒரு லட்சம் ரூபாய் செலவாகிறது. ஏக்கருக்கு 1,400 கிலோ விதை மஞ்சள் தேவை. ஒரு கிலோ விதை மஞ்சள் 50 ரூபாய் விலை கூறப்படுகிறது. தொழுஉரம், ரசாயன உரம், மேலுரம் என மூன்று முறை வைக்கப்படுகிறது. ஒவ்வொரு முறையும் 1,500 ரூபாய் வரை செலவாகிறது. பாத்தி அமைக்கவும், விதைக்கவும் 5,000 ரூபாய்
வரை செலவாகிறது.பூச்சி மருந்து அடித்தல், களை எடுத்தல், அறுவடை செய்தல் என ஒரு ஏக்கரில் மஞ்சள் பயிரிட ஒரு லட்சம் ரூபாய் செலவாகிறது. ஏக்கரில் 20 முதல் 25 குவிண்டால் மஞ்சள் அறுவடை
செய்ய முடியும். மஞ்சள் விலை உயர்வு மகிழ்ச்சி அளிக்கிறது.சில வாரங்களாக தொடர்ச்சியாக ஒரே விலைக்கு விற்கப்படுகிறது. வரும் காலங்களில் மஞ்சள் விலை உயர வாய்ப்புள்ளது. மஞ்சள் வைத்துள்ள விவசாயிகள் தங்கள் வீடுகளில் இருப்பு வைத்து பாதுகாக்கின்றனர்.இவ்வாறு அவர் கூறினார்.
ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டுக்கு மஞ்சள் வரத்து படிப்படியாக குறைந்து கொண்டே செல்கிறது. நான்கு நாட்கள் விடுமுறைக்கு பின் நேற்று மஞ்சள் மார்க்கெட் துவங்கியதும் 1,500 மூட்டை வரை வரத்தானது. சீஸன் நேரத்தில் 5,000 மூட்டை வரத்தாகும்.

**வரத்து இருந்தும் காய்கறி விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 05,2010,01:38 IST

சிவகங்கை:சிவகங்கை வாரச்சந்தையில் அதிக வரத்து இருந்த போதும், கடந்த வாரத்தை விட, நேற்று காய்கறி விலை கூடுதல் விலைக்கு விற்கப்பட்டது. சந்தையில் காய்கறி விலை (கிலோ):16 ரூபாய்க்கு விற்ற கத்தரிக்காய்- 20; 12 க்கு விற்ற வெண்டைக்காய் -10; 20 க்கு விற்ற பாகற்காய்- 24; 30 க்கு விற்ற முருங்கை பீன்ஸ்- 34; 30 க்கு விற்ற கேரட்- 40; 10 க்கு விற்ற முள்ளங்கி- 12; 20 க்கு விற்ற உருளை கிழங்கு- 15; முட்டை கோஸ்- 15; 10 க்கு விற்ற தக்காளி-15; கருணை கிழங்கு- 50; இஞ்சி- 40; 24 க்கு விற்ற அவரைக்காய்- 30. 60க்கு விற்ற பட்டர் பீன்ஸ்- 80; 20 க்குவிற்ற வெங்காயம், பெல்லாரி- 16; காலி பிளவர்- 20; பீட்ரூட்- 16; 16 க்கு விற்ற நூக்கல் -14; சோயா பீன்ஸ்- 60; எலுமிச்சை- 30; 20 க்கு விற்ற பூசணி- 24; சீனி அவரை 10; 20 க்கு விற்ற மல்லித்தழை 25 ரூபாய்.பழங்கள் விலை உயர்வு: ஆப்பிள்- 80, இரண்டாவது ரகம் 60; 60 க்கு விற்ற ஆரஞ்சு- 80; 30 க்கு விற்ற காசாலட்டு மாம்பழம்-50; சப்போட்டா 12; 70 க்கு விற்ற வெள்ளை திராட்சை- 60, கறுப்பு-40; பேரிக்காய் 15; 20 க்கு விற்ற அன்னாசி பழம்- 20; மாதுளை- 60; இரண்டாவது ரகம்- 40; பிளம்ஸ்-40 ரூபாய்.மளிகையும் உயர்வு: 66 க்கு விற்ற துவரம் பருப்பு-68; 52 க்கு விற்ற தட்ட பயறு- 50; கடலை பருப்பு- 36; உளுந்தம் பருப்பு- 80; கொண்ட கடலை- 36; பாசி பருப்பு- 80; பாசி பயறு- 72; 44 க்கு விற்ற மொச்சை பயறு- 46, 70 க்கு விற்ற வெள்ளை மொச்சை- 74; 22 க்கு விற்ற பட்டாணி- 24, 25 க்கு விற்ற வெள்ளை பட்டாணி- 28; 40க்கு விற்ற மல்லி- 45; 50 க்கு விற்ற புளி- 54, நயம்- 56; 60 க்கு விற்ற வத்தல்- 65, 40 க்கு விற்ற இரண்டாவது ரகம்- 50; மலை பூண்டு-120, பூண்டு- 100, சாதா ரகம்- 60; 140 க்கு விற்ற சோம்பு- 160; 50 க்கு விற்ற வெந்தயம் - 55; கசகசா - 320; 180 க்கு விற்ற சீரகம்- 200; 45 க்கு விற்ற கடுகு- 40; 200 க்கு விற்ற மிளகு -260 ரூபாய்.அரிசி (கிலோ): 21 க்கு விற்ற கல்சர் பொன்னி-22; 30 க்கு விற்ற டீலக்ஸ் பொன்னி- 32; 19 க்கு விற்ற ஐ.ஆர்., 20- 20; செல்லப்பொன்னி- 22; பொன்னி பச்சரிசி- 32; பச்சரிசி- 22; இட்லி அரிசி- 22 ரூபாய்.74 க்கு விற்ற கடலை எண்ணெய்- 78; தேங்காய் எண்ணெய்- 80; 80 க்கு விற்ற நல்லெண்ணெய்- 90; பாமாயில்- 44 ரூபாய்.

**மண் வளத்துக்கு இயற்கை உரம் பயன்படுத்த யோசனை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 05,2010,02:52 IST

குளித்தலை: தோகமலை உதவி வேளாண் இயக்குனர் (பொ) காதர்மொஹைதீன் வெளியிட்ட அறிக்கை: மண் வளத்தை பாதுகாக்க அதிக அளவு இயற்கை உரம் பயன்படுத்த வேண்டும். இவற்றில் பசுந்தாள் உரம் எளிதாகவும், குறைந்த செலவிலும் கிடைக்க கூடியது. சுந்தாழை உரம் என்பது குளக்கரை, தரிசநிலம், காடுகளில் உள்ள ஆவாரை, புங்கம், பூவரசு, கொடிபூரசு, வேம்பு வாதநாராயணன், ஆடாதொடா, நுணா, நெச்சி, சவுண்டல் போன்ற மரங்களில் இருந்து இலை தழைகளை சேகரித்து நஞ்சை நிலத்தில் மிதிக்க வேண்டும். நடவுக்கு இரு வாரம் முன் செய்ய வேண்டும். ஏக்கருக்கு 2,500 கிலோ என்ற அளவில் பசுந்தழை இடவேண்டும். தக்கைப்பூண்டு கொளுஞ்சி, சணப்பை அகத்தி, சீமை அகத்தி, பள்ளிப்பயிறு போன்றவை நிலத்தில் பயிரிட்டு பூக்க

ஆரம்பித்த உடன், மடக்கி உழுவதாகவும், பயிறு வகை காற்றில் உள்ள தழைச்சத்தை அதிக அளவு மண்ணில் நிலைப்படுத்துவதால் நிலம் வளம் அடைகிறது.

**நெல் பயிரை தாக்கும் நோய்: வேளாண் துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 05,2010,02:59 IST

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தற்போது நடவு செய்துள்ள நெல் பயிரில் நோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளதால் ஜிங்க் சல்பேட் நுண்ணூட்ட சத்து இட்டு நோயை தடுத்து கூடுதல் மகசூல் பெறலாம்' என வேளாண் இணை இயக்குனர் ராஜன் தெரிவித்தார். அவர் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சராசரியாக ஆண்டுக்கு 27,000 ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. நடப்பாண்டில் கிருஷ்ணகிரி மற்றும் பாரூர் நீர்தேக்கங்களில் உரிய நேரத்தில் பசானத்துக்கு நீர் திறந்துவிடப்பட்டுள்ளதால், கிருஷ்ணகிரி மற்றும் பாரூர் ஆயக்கட்டுபகுதிகளில் நெல் நாற்று விட்டு நடவுப்பணிகள் நடந்து வருகிறது. நடப்பாண்டில் மே, ஜூன், ஜூலையில் நல்ல மழை பெய்துள்ளதால் கிணற்று பாசனத்தை கொண்டும் நெல் நாற்று விடும் பணியும் மற்றும் நடவு பணியும் மாவட்டம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நடவு செய்த நெல் வயலில் ஜிங்க் சல்பேட் பற்றாக்குறையால் பயிர் வளர்ச்சி குன்றியும், தூர் கட்டுதல் குறைந்தும் காணப்படுகிறது. மேலும், முதலில் இளம் தளிர்கள் மஞ்சளாகவும், பின் இலைகளும் மஞ்சள் நிறமாக காணப்படுகிறது. இலையின் அடிபாகத்தில் நடு நரம்பின் இருபுறமும் பட்டையான மஞ்சள் நிறக்கோடுகள் தோன்றியுள்ளது. இதனால், மகசூல் பெரிதும் பாதிக்கும். இதனை போக்க விவசாயிகள் தற்போது, நெல் பயிரிருக்கு ஜிங்க் சல்பேட் இடுவது மிகவும் அவசியமாகும். நெல் பயிருக்கு தழை, மணி மற்றும் சாம்பல் சத்து இடுவதை போன்று ஜிங்க் சல்பேட் நுண்ணுரம் பயிருக்கு இட வேண்டியதும் ஒரு முக்கிய தொழில் நுட்பமாகும். ஜிங்க் சல்பேட் நுண்ணுரம் ஏனைய சத்துக்களான தழை, மணி மற்றும் சாம்பல் சத்துகளை பயிர் எடுத்துக்கொள்ள தேவையான ஒரு கிராய ஊக்கியாகும். இதில் உள்ள ஜிங்க் சத்து பயிரிக்கு எதிர்ப்பு சக்தியை அளிகிறது. கந்தக சத்து பயிரின் வளர்சிக்கும் தானிய உற்பத்திக்கும் உதவுகிறது. பொதுவாக நெற்பயிர் சாகுபடி செய்யப்படும் அனைத்து நிலைங்களுக்கும் ஜிங்க் சல்பேட் இடவேண்டும். குறிப்பாக களர் மற்றும் உவர் நிலங்களுக்கு கண்டிப்பாக ஜிங்சல் பேட் நுண்ணுரத்தை இட வேண்டும். நெல் நடவு வயலுக்கு அடியுரமாக ஏக்கருக்கு 10 கிலோ ஜிங்க் சல்பேட்டினை 20 கிலோ மணலுடன் கலந்து நடுவதற்கு முன் சீராக இட வேண்டும். களர் நிலமாக இருந்தால் ஏக்கருக்கு 16 கிலோ ஜிங்க் சல்பேட்டினை 20 கிலோ மணலுடன் கலந்து இடவேண்டும். நடுவதற்கு முன் இட இயலவில்லை என்றால் நட்ட ஒரு வார காலத்திற்குள் இட வேண்டும். தற்போது கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அனைத்து பிரதான மற்றும் துணை வேளாண் விரிவாக மையங்களிலும் ஜிங்க் சல்பேட் இருப்பு வைக்கப்பட்டு 50 சத மானியத்தில்

விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகள் நெல் பயிருக்கு ஜிங் சல்பேட் இட்டு அதிக மகசூல் பெறலாம்.

**அதிக மகசூல் பெற விவசாயிகளுக்கு அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 05,2010,03:55 IST

மடத்துக்குளம்: மடத்துக்குளம் வேளாண்மை விரிவாக்க மையம் சார்பாக "ஆத்மா' திட்டத்தில் பண்ணைப் பள்ளி வகுப்புகள் நடந் தன. அமராவதி பழைய ஆயக்கட்டுபகுதியில் தற்போது குறுவை நெல் சாகுபடி நடந்து வருகிறது. இந்நிலையில் விவசாயிகள் செம்மை நெல் சாகுபடி முறையை பயன்படுத்தினால் ஏக்க
ருக்கு 30 முதல் 40 சதவீதம் அதிக மகசூல் பெறமுடியும் என மடத்துக்குளம் வேளாண்மை விரிவாக்க மையத்தினர் கூறியுள்ளனர். இது தொடர்பான விளக்க பயிற்சி எஸ்.கண்ணாடிப்புத்தூர் பகுதி விளைநிலங்களில் "ஆத்மா' திட்ட பண்ணைப்பள்ளி வகுப்புகளில் நடந்தது. உதவி தொடக்க வேளாண்மை அலுவலர் பொன்முடி தலைமை வகித்தார். அவினாசிலிங்கம் வேளாண்மை விரிவாக்க மைய அலுவலர் கவிதா பேசினார்.

இதில் ஒற்றை நாற்று முறையை பயன்படுத்தினால் வழக்கத்தை விட அதிக மகசூல் பெறுவது, வழக்கமான முறையில் ஏக்கருக்கு 10 முதல் 30 கிலோ வரை விதைநெல் பயன்படுத்த வேண்டும். இந்த முறையில் மூன்று கிலோ பயன்படுத்தினால் போதுமானது. பாசனத்துக்கு செலவிடப்படும் 50 சதவீதம் பாசன நீர் சேமிக்கப்படுவது, பூச்சிக்கொல்லி தாக்காமல் காப்பது, பயிர்களுக்கான காப்பீடு குறித்தும் விளக்கப்பட்டது. வேளாண் உதவியாளர்கள் அப்துல் ஜலீல் ராஜா, ஆரோக்கியசாமி, பிரகாஷ் மற்றும் மடத்துக் குளம், கணியூர், குமரலிங்கம், சோழமாதேவி உள்ளிட்ட கிராமங்களில் இருந்து விவசாயிகள் பங்கேற்றனர்.

**கேரளாவில் தேவை குறைவு கத்தரிக்காய் விலை சரிந்தது**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 05,2010,03:52 IST

பல்லடம்:கேரளாவில் கத்தரிக்காய்க்கு வரவேற்பு குறைந் ததால், பல்லடம் பகுதியில் கத்தரிக்காய் கொள் முதல் விலை கிலோவுக்கு ஆறு ரூபாய் சரிந்தது.பல்லடம் பகுதியில் ஜல்லிப்பட்டி, செலக் கரிச்சல், அனுப்பட்டி, மந்திரிபாளையம், வேப் பங்கொட்டை பாளையம் உட்பட பல்வேறு இடங்களில் 600 ஏக்கர் பரப்பளவில் கத்தரிக்காய் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அறுவடைக்கு பின், திருப்பூர், பல்லடம், கோவை, ஒட்டன் சத்திரம் ஆகிய பகுதிகளில் உள்ள

மார்க்கெட்டுகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. குறிப் பாக, மீனாட்சிபுரம், நடுப்புணி , மூணாறு ஆகிய பகுதிகள் வழியாக கேரளாவுக்கு கத்தரிக்காய் மிக அதிக அளவு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.கடந்த இரு வாரங்களாக, கேரளா மற்றும் கேரளாவைச் சுற்றியுள்ள கிராமப்பகுதிகளில் கத்தரிக்காய் விளைச்சல் அதிகரித்துள்ளது. இதன்காரணமாக, கேரளாவுக்கு பல்லடம், சுல்தான் பேட்டை பகுதிகளில் இருந்து தேவைப்படும் கத்தரிக்காய் அளவு குறைந்துள்ளது.

இதனால், பல்லடம், சுல்தான்பேட்டை கத்தரி விவசாயிகள், திருப்பூர், கோவை, ஒட்டன்சத்திரம் பகுதிகளில் உள்ள மார்க்கெட்டுகள் மற்றும் அருகில் உள்ள உழவர் சந்தைகளில் மட்டும் விற்பனை செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப் பட்டுள்ளனர்.உள்ளூரில் கத்தரிக்காய் கொள்முதல் விலை சரிந்துள்ளது. இரு வாரத்துக்கு முன், ஒரு கிலோ கத்தரிக்காய் 20 ரூபாய்க்கு கொள்முதல் செய் யப்பட்டது. தற்போது, கிலோவுக்கு ஆறு ரூபாய் குறைத்து 14 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப் படுகிறது. இவ்விலை கட்டுப்படியாக இருப்பதால், விவசாயிகள் கவலைப்படவில்லை.

**பருத்தி விவசாயிகளுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 05,2010,03:51 IST

திருப்பூர்:திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வாரந்தோறும் செவ்வாய்கிழமை நடக்கும் ஏலத்தில் பங்கேற்க, பருத்தி விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வாரந்தோறும் பருத்தி ஏலம் நடக்கிறது. விற்பனை கூடத்துக்கு, சோளம், வரமிளகாய் உள்ளிட்ட தானியங்களின் வரத்து குறைந்திருந்தது. கடந்த வாரம் பருத்தி நல்ல விலைக்கு விற்றதால், வரும்

வாரத்தில் ஏலத்துக்கு அதிக வரத்து இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், ஏலத்தில் பங்கேற்க விரும்பும் விவசாயிகள், முன்னரே தகவல் தெரிவிக்க வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளது.ஒழுங்குமுறை விற்பனைகூட கண்காணிப்பாளர் ஆறுமுகராஜன் கூறியதாவது: ஆடிப்பண்டிகை என்பதால், தானியங்கள் வரத்து குறைந்திருந்தது. சோளம் 65 குவிண்டால், கம்பு 22 குவிண்டால், ராகி 7 குவிண்டால், வரமிளகாய் 6 குவிண்டால், நெல் 120 குவிண்டால், கொள்ளு 42 குவிண்டால், பாசிப்பயறு 25 குவிண்டால் வந்திருந்தது.சோளம் 1,200 முதல் 1,400 ரூபாய் வரை; கம்பு 950 முதல் 1,050 வரை; ராகி 950 முதல் 1,100 வரை; வர மிளகாய் 3,800 முதல் 4,100 வரை; நெல் 900 முதல் 1,100 வரை; கொள்ளு 1,800 முதல் 2,000 ஆயிரம் வரை; பாசிப்பயறு 5,500 முதல் 6,000 ரூபாய் வரை விற்பனையானது.இந்த வார விற்பனைக்கு பருத்தி வரத்தில்லை; கடந்த வாரத்தில் பருத்தி குவிண்டால் 2,900 முதல் 3,400 ரூபாய் வரை விற்பனையானது. வரும் வாரத்தில் ஏலம் நடப்பதற்கான வாய்ப்புள்ளது. ஏலத்துக்கு பருத்தி கொண்டு வரும் விவசாயிகள், முன்னரே தகவல் தெரிவித்தால், அதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்படும், என்றார்.

## கஞ்சிக்கோடு அருகே நெற்பயிர்களை சேதப்படுத்திய காட்டு யானைகள்

பாலக்காடு, ஆக.5–
கஞ்சிக்கோடு அருகே நெற்பயிர்களை காட்டு யானைகள் தொடர்ந்து சேதப்படுத்தி வருவதால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

காட்டு யானைகள் அட்டகாசம்

பாலக்காடு–கோவை இடையே புதுச்சேரி வேனோழி முதல் கஞ்சிக்கோடு வரை உள்ள கிராம பகுதியில் அடிக்கடி காட்டு யானைகள் புகுந்து விடுகின்றன. இந்த காட்டு யானைகள் அடிக்கடி ஊருக்குள் புகுந்து விளைந்த நெற்பயிர்கள், வாழை மரங்கள், தென்னை, பாக்கு மரங்களை ஒடித்து சேதப்படுத்தி வருகின்றன.

காட்டு யானைகளின் அட்டகாசத்தால் விவசாயிகள் பெரிதும் கவலை அடைந்து உள்ளனர். யானைகளின் அட்டகாசத்தை தடுக்க மின்வேலி அமைக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தார்கள். ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் வனத்துறை அதிகாரிகள் எடுக்கவில்லை. அதே போல் காட்டு யானைகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் நஷ்டஈடு தொகையும் வழங்க முன் வரவில்லை என்று குற்றச்சாட்டு எழுந்து உள்ளது.

நெற்பயிர்கள் நாசம்

இந்த நிலையில் 2 நாட்களுக்கு முன் ஒரு பெரிய ஆண் யானையும், குட்டி யானையும் கஞ்சிக்கோடு அருகே உள்ள பன்னிமடை பகுதியில் புகுந்தது. அங்கு பன்னிமடையை சேர்ந்த ரமேஷ்குமார், விஜயலட்சுமி, ரஞ்சித்குமார், லதா, பிரேம்குமார், ராதாகிருஷ்ணன், கிருஷ்ணன்குட்டி ஆகிய விவசாயிகளின் நெற்பயிர்களை யானைகள் துவம்சம் செய்தன. யானைகளின் இந்த அட்டகாசத்தால் சுமார் 10 ஏக்கர் நெற்பயிர்கள் சேதம் அடைந்தன. இதனால் விவசாயிகள் பெரிதும் கவலை அடைந்தார்கள்.

## நடப்பு 2010–11 பருவத்தில் உலக கோதுமை உற்பத்தி 65 கோடி டன்னாக இருக்கும்



*நடப்பு 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில், சர்வதேச அளவில், கோதுமை உற்பத்தி 65.10 கோடி டன்னாக இருக்கும் என சர்வதேச தானிய கவுன்சில் தெரிவித்துள்ளது.*
*எனினும் இது முந்தைய மதிப்பீட்டைக் காட்டிலும் 1.30 கோடி டன் குறைவானது என்பது குறிப்பிடத்தக்கது.*
*எனினும் உலக அளவில் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படும் தானியங்களுள் கோதுமை மூன்றாவது இடத்தில் இருக்கும் என இக்கவுன்சில் குறிப்பிட்டுள்ளது. சென்ற 2009–10–ஆம் ஆண்டு பருவத்தில் உலகின் கோதுமை உற்பத்தி 67.70 கோடி டன்னாக இருந்தது.*
*நடப்பு பருவத்தில் உலக அளவில் மக்காச்சோளம் உற்பத்தி 82.30 கோடி டன்னாக இருக்கும் என சர்வதேச தானிய கவுன்சில் மதிப்பீடு செய்துள்ளது. அதாவது, சென்ற ஆண்டு பருவத்தைக் காட்டிலும் சுமார் 2 கோடி டன் அதிகமாக இருக்கும் என்று தெரிவித்துள்ளது.*

## போதிய மழை இல்லாததால் வெங்காயம் உற்பத்தி பாதிக்கும் சூழ்நிலை விவசாயிகள் வேதனை

*கோவை, ஆக.5–*
*கோவை மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை போதிய அளவு பெய்யாததால் சின்ன வெங்காய உற்பத்தி பாதிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.*
*சின்ன வெங்காயம்*
*கோவை மாவட்டத்தில் பேரூர், தொண்டாமுத்தூர், குப்பனூர், கரடிமடை, சித்திரைச்சாவடி, பூலுவபட்டி, நாதேகவுண்டன்புதூர், செம்மேடு, போளுவாம்பட்டி, வீராலியூர், நரசிபுரம், கெம்பனூர் உள்பட அதன் சுற்றுவட்டார பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் சின்ன வெங்காயம் தனியாகவும், மஞ்சளில் ஊடுபயிராகவும் விவசாயிகள் பயிர் செய்துள்ளனர்.*
*இந்த சின்ன வெங்காயம் சித்திரை மற்றும் வைகாசி பட்டத்தில் பயிர் செய்யப்பட்டு ஆடி அல்லது ஆவணிப்பட்டத்தில் அறுவடைக்கு வரும். அறுவடை சமயமான இந்த பட்டத்தில் பயிர் செய்யப்பட்டு உள்ள வெங்காயம் நன்கு திரண்டு காய்கள் வளர்ச்சி அடைந்து காணப்படும். ஆனால் தற்போது தென் மேற்கு பருவ மழை போதிய அளவு பெய்யாத காரணத்தால் சின்ன வெங்காயம் பயிர் செய்துள்ள விவசாயிகள் மிகுந்த வேதனை அடைந்துள்ளனர்.*
*வைகாசி பட்டம்*
*இது குறித்து விவசாயிகள் சிலர் கூறியதாவது:–*
*எங்களது பகுதியில் அந்தந்த பட்டத்துக்கு ஏற்ற வகையில் விவசாய பயிர்களான வெண்டை, அவரை, புடலை, தக்காளி, கத்தரி, பாவக்காய் உள்பட பல்வேறு பயிர்களை பயிர் செய்வோம். தற்போது ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் சின்ன வெங்காயம் தனிப்பயிராகவும், மஞ்சளில் ஊடு பயிராகவும் பயிர் செய்துள்ளோம். வைகாசி பட்டத்தில் விதைத்த வெங்காயம் இந்த பட்டத்தில் நன்கு திரண்டு வளர்ச்சி அடைந்து காணப்படும்.*

இதற்கு தேவையான உரங்களாக டி.ஏ.பி மற்றும் யூரியா ஆகியவற்றையும் ஒவ்வொரு முறை செடி வளரும் போது வைத்துள்ளோம். மேலும் ஆடி மாதத்தில் தென் மேற்கு பருவ மழை பெய்யும்.

உற்பத்தி பாதிப்பு

இந்த மழை சின்ன வெங்காயம் மற்றும் மஞ்சளுக்கு போதுமானதாக இருக்கும். மேலும் மழையின் மூலம் கிடைக்கும் காய் நன்கு திரண்டு அதிக விளைச்சலை கொடுக்கும். ஆனால் இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை போதுமான அளவு பெய்யாத காரணத்தால் காய்கள் வளர்ச்சி அடையாமலும் செடிகள் கருகி அழியும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது வீசும் காற்று, அடிக்கும் வெயில் காரணமாக வெங்காயம் மற்றும் மஞ்சள் செடிகள் கருகி காய்ந்து போகும் நிலை ஏற்பட்டு உள்ளது. இதன் காரணமாக சின்ன வெங்காயத்தின் உற்பத்தி கடுமையாக பாதிக்கும் சூழ்நிலை ஏற்பட்டு உள்ளது. இவ்வாறு விவசாயிகள் வேதனையுடன் கூறினார்கள்.

## கூடலூர் பகுதியில் போதிய மழை பெய்யாததால் விவசாயம் பாதிக்கும் அபாயம் நீரோடைகளில் நீர் வரத்தும் இல்லை

கூடலூர், ஆக.5–

கூடலூர் பகுதியில் போதிய அளவுக்கு பருவமழை இன்னும் பெய்யாமல் உள்ளது. இதனால் வரும் காலங்களில் விவசாயம் பாதிக்கும் அபாயம் உள்ளது. இதன் காரணமாக நீரோ டைகளிலும் நீர்வரத்து இல்லை.

காலம் கடக்கும் பருவமழை

நீலகிரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் ஜூன், ஜூலை மாதங்களில் தென் மேற்கு பருவமழை பெய்ய தொடங்கும். ஆனால் வழக் கத்துக்கு மாறாக இந்த ஆண்டு ஜூலை மாதம் தென்மேற்கு பருவமழை பெய்ய தொடங்கியது. ஆனால் சாரல் மழை மட்டுமே பெய்து வந்த நிலையில் மாத இறுதியில் பலத்த மழை பெய்யும் என எதிர்பார்க் கப்பட்டது.

கடந்த ஏப்ரல், மே மாதங் களில் ஏற்பட்ட வறட்சியான காலநிலையால் ஆறுகளில் நீர்வரத்து இல்லாமல் இருந் தது. பருவ மழை பெய்ததும் நீர்வரத்து அதிகரிக்க தொடங் கும். ஆனால் கடந்த சில தினங் களுக்கு முன்பு பெய்த பரவலான மழையால் வறண்டு கிடந்த ஆறுகளில் பெயரள வுக்கு நீர் வரத்தொடங்கி யுள்ளது. இந்த நிலையில் ஆடி பெருக்கு சமயத்தில் கனமழை பெய்யும் என விவசாயிகள் பெரும் எதிர்பார்ப்புடன் இருந்தனர்.

போதிய மழை பெய்யாததால்

ஆனால் ஆடி பெருக்கு தினத்தில் காலையில் நன்கு வெயில் சுட்டெரித்தது. பின்னர் பகல் 11 மணிக்கு தொடங்கி விட்டு விட்டு சாரல் மழை பெய்து அனைவரது எதிர்பார்ப்பை யும் தவிடு பொடியாக்கியது மழை. நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதியில் ஆண்டுக்கு 6 மாதம் நன்கு மழை பெய்த நிலையில் கடந்த 2005 முதல் படிப்படி யாக மழையின் அளவு குறைந்து கொண்டே வருகிறது.

காடுகளின் பரப் பளவு வெகுவாக அழிந்து வருவதால் மழையின் அளவு குறைந்து கொண்டே வருகிறது. தென்னகத்தின் நீர் தொட்டி, இந்தியாவின் 2–வது சிரபுஞ்சி என அழைக்கப்பட்டு வந்த கூடலூர், தற்போது வானம் பார்த்த பூமியாக நிற்க வேண் டிய நிலைக்கு தள்ளப்பட்டு வருகிறது.

கூடலூரில் இந்த ஆண்டு போதிய மழை பெய்யாததால் விவசாயிகள் கலக்கத்துடன் உள்ளனர்.

விவசாயம் பாதிக்கும் அபாயம்

நன்கு மழை பெய்தாலே கூடலூர் பகுதியில் குடிநீர் பிரச்சினை தலை தூக்குவது வாடிக்கை. இது தவிர விவசாய பூமியான கூடலூர் வறட்சியில் சிக்கும் அபாயமும் எழுந்துள் ளது. இனி வரும் காலங்களில் பலத்த மழை பெய்து ஆறுகளில் வெள்ளம் கரை புரண்டால் மட்டுமே நிலத்தடி நீர்மட்டம் உயரும். இல்லை யெனில் கூடலூர் பகுதியில் விவசாயம் பாதிக்கும் சூழல் ஏற்படும். பருவமழை பெய்யும் என அனைவரும் எதிர்பார்ப் போம்.

## நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறை பண்ணையில் நாற்றுக்கள் விற்பனைக்கு தயார்

ஊட்டி, ஆக.5–

ஊட்டி தோட்டக்கலை துறை இணை இயக்குனர் (பொ) தேவராஜ் விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டு உள்ளதாவது:–நீலகிரியில் தமிழ்நாடு அரசு தோட்டக்கலை துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் தேவாலா பண்ணையில் சில்வர் ஓக் மர நாற்றுக்கள், காப்பி, பாக்கு, தேயிலை மற்றும் மிளகு நாற்றுக்கள் விற்பனைக்கு தயாராக உள்ளன. மேலும் தோட்டக்கலை துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் தொட்டபெட்டா பண்ணையில் தேயிலை நாற்றுக்களும். ரோஜா பூங்காவில் ரோஜா கன்றுகள், சாம்பிரானி மரக்கன்றுகள், மருத்துவ செடிகள் ஆகியவையும் விற்பனைக்கு தயாராக உள்ளது.

ஊட்டி அருகே நஞ்சநாடு பண்ணை மற்றும் கோல்கிரைன் பண்ணை ஆகியவற்றில் உருளைக்கிழங்கு விதைகளும், கோல்கிரைன் பண்ணையில் தேயிலை நாற்றுகளும் விற்பனைக்கு தயார் நிலையில் உள்ளன. இவற்றை அந்தந்த பகுதி விவசாயிகள் அவர்கள் பகுதியில் உள்ள பண்ணை மேலாளரை அணுகி பெற்றுக்கொள்ளலாம். இதேபோல் நீலகிரி மாவட்டம் தும்மனட்டியில் உள்ள அரசு தோட்டக்கலை பண்ணையில் தரமான அர்கா கோமல பீன்ஸ் விதைகள் உற்பத்தி செய்யப்பப்பட்டு விற்பனைக்கு தயாராக உள்ளன. மேற்கண்ட விதைகள், நாற்றுக்கள் இந்த பருவத்தில் நடவு செய்வதற்கு தயார் நிலையில் உள்ளது. தேவைப்படும் விவசாயிகள் ஊட்டி பஞ்சாயத்து அலுவலகத்தில் வேளாண் கிடங்கில் வந்து பெற்று கொள்ளலாம். இவ்வாறு அந்த செய்தி குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.



# வேளாண்மை செய்திகள்

## ஆடிப்பட்ட பயிர்களுக்கான சந்தை நிலவரம்

கோவை, ஆக.5-

தமிழ்நாட்டில் ஆடிப்பட்டம் மானவாரி பயிர் சாகுபடி செய்ய ஏற்ற பட்டமாகும். இந்த பருவத்தில் தானியங்கள், எண்ணெய் வித்து பயிர்கள் மற்றும் காய்கறி பயிர்கள் அதிகமாக பயிர் செய்யப்படும். ஆடிப்பட்டத்தில் பயிரிடப்படும் பயிர்களை தேர்வு செய்ய ஏதுவாக வேளாண் பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் உள்நாட்டு ஏற்றுமதி சந்தை தகவல் மையம் சார்பில் விலை மற்றும் சந்தை நிலவரத்தை ஆய்வு செய்து அறுவடை விலையை முன்னறிவிப்பு செய்து உள்ளது.

### மக்காச்சோளம்

உலக அளவில் மக்காச்சோளத்தின் உற்பத்தி இந்த ஆண்டில் 804 மில்லியன் டன்களாக இருக்கும் என்று சர்வதேச தானிய கழகம் கணித்துள்ளது. இது கடந்த ஆண்டு உற்பத்தியை விட 2 சதவீதம் அதிகமாகும். மேலும் மக்காச்சோளத்தின் தேவை 818 மில்லியன் டன்களாக இருக்கும் என்று கணிக்கப்பட்டு உள்ளது.

தமிழ்நாட்டை பொறுத்தவரை மக்காச்சோளத்தின் விலை கடந்த மாதத்தில் குவிண்டாலுக்கு ரூ.1,100-ஐ தாண்டியது. இதன் காரணமாக ஆடிப்பட்டத்தில் விதைத்து அக்டோபர் மற்றும் நவம்பர் மாதத்தில் சந்தைக்கு வரும் மக்காச்சோளத்துக்கு இதே விலை கிடைக்குமா என்று தெரிந்துகொள்ள விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர். வர்த்தக மூலங்களின் தகவல்படி மக்காச்சோளத்தின் விலை இந்த மாதம் இறுதி வரை இதே நிலை நீடிக்கும் என்று தெரிவித்துள்ளது.

### விலை ஆய்வு

கர்நாடக மாநிலத்தில் இருந்து சந்தைக்கு வரும் மக்காச்சோளம் வரும் வரை விலை இதே நிலையில் இருக்கும் என்றும் இந்த மாதத்துக்கு பின்னர் விலை குவிண்டாலுக்கு ரூ.1000-லிருந்து சரியும் என்று வர்த்தக மூலங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் மக்காச்சோளத்தின் விலையை முன்னறிவிப்பு செய்ய விலை ஆய்வை மேற்கொண்டது. உடுமலைப்பேட்டை ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் கடந்த 10 ஆண்டுகளாக நிலவிய விலை நிலவரங்கள் ஆய்வு செய்யப்பட்டன. அதன்படி ஆடிப்பட்டத்தில் விதைக்கப்பட்டு அக்டோபர் மற்றும் டிசம்பர் மாதத்தில் சந்தைக்கு வரும் மக்காச்சோளத்தின் விலை குவிண்டாலுக்கு ரூ.850 முதல் ரூ.950 வரை நிலவும் என்று கணிக்கப்பட்டு உள்ளது. மேலும் கோழித் தீவனத் தேவை, கரீப் பருவத்தில் செய்யப்படும் மக்காச்சோள சாகுபடி பரப்பு குறைந்துள்ளது. இதன் காரணமாக மக்காச்சோளத்தின் விலை ஏறுமுகமாக இருக்கும் என்று தெரிகிறது.

### நிலக்கடலை

இந்தியாவின் எண்ணெய் வித்து பிரிவு ஒரு குழப்பமான சூழ்நிலையை சந்தித்து கொண்டு இருக்கிறது. தற்போது 125 லட்சம் டன் வரை எண்ணெய் வித்து இருப்பு, அதிகரித்து வரும் பனை எண்ணெய் இறக்குமதி, குறைந்து வரும் புண்ணாக்கு ஏற்றுமதி மற்றும் உணவு எண்ணெய்க்கான தடை ஆகியவை இந்த சூழ்நிலையை உருவாக்கி உள்ளன. கடந்த ஆண்டு கரீப் பருவத்தில் இந்தியாவில் 53 லட்சம் ஹெக்டேரில் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டது. இதில் குஜராத் மாநில நிலக்கடலை சாகுபடி பரப்பு மட்டும் 18 லட்சம் ஹெக்டேர்களாகும். தமிழ்நாட்டை பொறுத்தவரை நிலக்கடலை சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தி திறனும் நன்றாக இருக்கிறது. அதிகமான எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்ட போதிலும், 10 லட்சம் மெட்ரிக் டன் நிலக்கடலை உணவு பொருளுக்கு தேவைப்படுவதாலும், விழாக்காலங்களில் ஏற்படும் அதிகமான தேவை காரணமாக நிலக்கடலையின் விலை செப்டம்பர் முதல் டிசம்பர் வரை குவிண்டாலுக்கு ரூ.2,900 முதல் ரூ.3,200 வரை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### எள்

இந்தியாவின் எண்ணெய் வித்து பயிரான எள்ளின் உற்பத்தி ரபி பருவத்தில் 3 லட்சம் டன்களாக இருந்தது. இது கடந்த ஆண்டை காட்டிலும் அதிகமாகும். இந்த ஆண்டு எள்ளின் உற்பத்தி ஆப்பிரிக்கா மற்றும் சீனாவில் அதிகமாக இருப்பதாலும் சீனா குறைந்த அளவே எள்ளை இறக்குமதி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் ஆந்திர மாநிலத்தில் எள் அறுவடையும் நன்றாகவே உள்ளது. இதே போல் கர்நாடக மாநில எள்ளின் உற்பத்தியும் நன்றாக உள்ளதால் இந்த மாதம் முதலே சந்தைக்கு வரத்தொடங்கி விட்டது. மேற்கு வங்க மாநிலத்தில் இருந்து சந்தைக்கு வரும் எள்ளின் தரம் குறைவாக இருப்பதால் அதன் விலையும் குறைவாக இருக்கிறது.

ஈரோடு, திருச்சி, பெரம்பலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் இருந்து தற்போது பயிரிடப்பட்டு உள்ள எள் அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் சந்தைக்கு வரும். அறுவடையின் போது சிகப்பு எள்ளுக்கு ஒரு கிலோ விலை செப்டம்பர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை ரூ.37.40 பைசாவாகவும், வெள்ளை எள் ரூ.48.50 பைசாவாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே விவசாயிகள் நடப்பு பட்டமான ஆடிப்பட்டத்தில் மக்காச்சோளம், நிலக்கடலை, மற்றும் எள்ளை பயிர் செய்யலாம் என்று விவசாயிகளுக்கு வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை வழங்கி உள்ளது.

## கோவை வேளாண் பல்கலைக்கழகம் அறிவிப்பு

## வேளான் நிலங்களில்
## கீழாநெல்லி மூலிகை சாகுபடி

மூலிகை மருத்துவத்துக்கு தேவையான மூலப்பொருட்கள் காடுகளில் கிடைக்கிறது. மருத்துவ பயனுக்காக மூலிகைகள் காடுகளில் இருந்து எடுக்கப்படுவதால், வளங்கள் குறைகிறது. இதனால் காடுகளின் வளத்தை பாதுகாக்கும் வகையில் மூலிகை குணம் கொண்ட செடிகளை வேளாண் நிலங்களில் சாகுபடி செய்யலாம். அந்த வகையில் கீழாநெல்லி மூலிகை செடி நாட்டின் பல்வேறு பகுதிகளில் அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

### கீழாநெல்லி மூலிகை

கீழாநெல்லி மூலிகை செடியானது பொதுவாக வயல்வெளிகளிலும், சாலையின் ஓரங்களிலும் வளரும். நாட்டின் எந்த மாநிலத்தில் சாகுபடி செய்தாலும் வளரும் தன்மை கொண்டது. இவை சுமார் 700 மீட்டர் உயரமுள்ள இடங்களில் 20 செ.மீ. உயரத்துக்கு வளரும்.

இந்த செடியானது சிறிது கசப்பும், துவர்ப்பும் கொண்டது. மேலும், வயிறு மற்றும் சிறுநீரக கோளாறுகள், சர்க்கரை நோய், குடல் சம்பந்தமான நோய்கள், மஞ்சள் காமாலை ஆகிய நோய்களை குணப்படுத்தும் மருந்தாக பயன்படுகிறது. மிகச்சிறந்த கிருமி நாசினி ஆகும். இதிலுள்ள வேதிப்பொருட்களான ஆல்போபில்லாதின் மற்றும் பில்லாதின் ஆகியவை மருந்து பொருளாக பயன்படுகின்றன. வேரை தவிர அனைத்து பகுதியும் மருந்து தயாரிக்க பயன்படுகிறது.

### நடவு முறை

கீழாநெல்லி மூலிகை செடி நேரடியாக வயல்களில் பயிரிடப்படுவதால், முறையான நாற்றங்கால் அமைக்க தேவையில்லை. நடவு செய்யும் முன்பு நிலத்தினை நன்றாக உழுது, அடி உரமாக ஏக்கருக்கு 500 கிலோ எரு இட்டால் போதுமானது. பின்னர் சீரான பாத்திகள் அமைக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 400 கிராம் விதைகளை தூவ வேண்டும். விதைகளை தூவும் முன் மணலில் நன்றாக கலக்கிக் கொள்ள வேண்டியது அவசியம்.

அதன்பின்னர் விதை முளைவிட்டு வளர்ந்த செடியை நடும்போது மக்கிய உரம் இட வேண்டும். செடியின் வளர்ச்சிக்கு நீர் அதிகம் தேவைப்படாது. எனவே 15 நாட்களுக்கு ஒரு முறை நீர் பாசனம் செய்தால் போதுமானது. பயிர்களுக்கு ரசாயன உரங்கள் இடுவதை தவிர்க்க வேண்டும். ஏனெனில் ரசாயன உரங்கள் மூலிகை செடியின் மருத்துவ குணங்களை அழித்து விடும்.

விவசாய நிலங்களில் மூலிகை சாகுபடி செய்வதன் மூலம், மருந்துக்காக காடுகள் அழிக்கப்படுவது, தவிர்க்கப்பட்டு, மண்வளமும் பாதுகாக்கப்படுகிறது. மண்வளம் பெருகி சாகுபடி அதிகரிப்பதால் விவசாயிகள் அதிக லாபம் பெறலாம்.

—தகவல்: வன மரபியல் மற்றும் மரபெருக்கு நிறுவனம், கோவை.

## வேளாண்மை-கேள்வி பதில்

கேள்வி: நாங்கள் எங்கள் கிராமத்தில் சுயஉதவிக்குழுக்கள் அமைத்துள்ளோம். விவசாயம் தொடர்பான சிறு தொழில்களை தொடங்க முடியுமா? பவானி, பொள்ளாச்சி.

பதில்: ஆதிகாலத்தில் மனிதன் தோன்றிய பெண்ணுடைமை சமுதாயத்தில் பெண்கள் தான் விவசாய உற்பத்தியில் முன் நின்றுள்ளனர். இன்றும் கூட பெண்கள் தான் வயல் சார்ந்த பணிகளில் அதிகம் இருக்கிறார்கள். உங்களது எண்ணம் சிறப்பானது. தொடக்கத்தில் நுட்பமான விவசாயம் சார்ந்த தொழில்களை நீங்கள் தேர்வு செய்யவேண்டாம். மண்புழு உரம் தயாரிக்க பயிற்சி எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் கிடைக்கும் விவசாய கழிவுகளை மட்க வைத்து மண்புழு உரம் தயாரித்து சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு விற்பனை செய்யுங்கள்.

இந்த திட்டம் தொடங்க உங்கள் சுயஉதவிக்குழுவை அருகில் உள்ள வேளாண் அலுவலகத்தில் பதிவு செய்ய முயலுங்கள். அவர்களிடம் இருந்து மானியமும், கடனும் கிடைக்க திட்டங்கள் இருக்கின்றன. உங்களுக்கு அடையாள அட்டை உள்பட பல வசதிகளை செய்து தருவார்கள். டான்வாப் என்ற வேளாண் திட்டத்தில் மகளிருக்கான விவசாயம் தொடர்பான நூற்றுக்கும் மேலான பயிற்சிகள் இருக்கின்றன. வேளாண் தொழிலில் ஆர்வமுடைய உங்கள் குழு உறுப்பினர்களுடன் உடனே வேளாண் அலுவலகத்தை அணுகி கேளுங்கள்.

கேள்வி: தமிழ்நாட்டுக்கு ஏற்ற பசு மற்றும் காளை இனம் எது? அவற்றை எப்படி கண்டறியலாம்? பெருமாள்,தாராபுரம்.

பதில்: தாராளமாக சொன்னால் அது தார்பார்கர் இன பசுக்கள் தான். வலுவாகவும், கம்பீரமாகவும், வெண்ணிறமாகவும், உயரமாகவும், நீண்ட கால்களுடனும் காணப்படும் நாட்டு இனம் இது. முன்நெற்றியானது சிறிது குவிந்து நடுத்தரமான கொம்புகளுடன் இருக்கும். இளம் கன்றுகளில் முதுகு தண்டு பகுதிகளில் வெள்ளை அல்லது வெளிர்சாம்பல் நிறத்தில் கோடுகள் காணப்படும். இதன் பிறப்பிடம் ஹைதராபாத்தில் உள்ள தார்பார்க்கர் மாவட்டம். தற்போது இந்த இனமானது தென்கிழக்கு சிந்தி, அமோர்காட், நவ்காட் உள்பட பல மாநிலங்களின் பகுதிகளில் காணப்படுகிறது. இந்த கறவை மாடுகள் அதிக நோய் எதிர்ப்பு திறன் கொண்ட நாட்டு இனம். தமிழகத்திலுள்ள வறட்சி பகுதிகளுக்கு ஏற்றவை. சராசரியாக நாள் ஒன்றுக்கு 8 முதல் 10 லிட்டர் பால் தரும். இந்த இனக்கன்றுகளை சரியாக இனம் காண கால்நடை மருத்துவரின் உதவியை நாடலாம். தற்போது நாட்டு மாட்டு நெய், பால் என்று கூட விற்பனைக்கு வந்துள்ளது. நாட்டு மாடுகளை கொண்டு ஒரு வித்தியாசமான பண்ணை கூட தொடங்க முயலுங்கள்.

**விவசாயிகளே உங்கள் சந்தேகங்கள், கேள்விகளை கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.**

**ஆசிரியர்,**
**வேளாண்மை செய்தி பிரிவு,**
**தினத்தந்தி, கோவை–18.**

